# TNUSRB – SUB INSPECTOR RECRUITMENT TRAINING – 2022
## TEST XIV – REVISION I - TAMIL ILAKANAM

1. புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும் - இக்குறளில் பயின்று வரும் அணி
a. உவமையணி b. எடுத்துக்காட்டு உவமை அணி
c. ஏகதேச உருவக அணி d. இயல்பு நவிற்சி அணி

2. அகரவரிசையில் சரியானதைக் கண்டறிக.
a. சிறுவன், சாப்பாடு, செய்தி, சலிப்பு, சோளம்
b. சிறுவன், செய்தி, சலிப்பு, சாப்பாடு, சோளம்
c. சலிப்பு, சிறுவன், சாப்பாடு, சோளம், செய்தி
d. சலிப்பு, சாப்பாடு, சிறுவன், செய்தி, சோளம்

3. தகுதி வழக்குக்குப் பொருந்தாதது எது?
a. இடக்கரடக்கல் b. மங்கலம் c. மரூஉ d. குழூஉக்குறி

4. பின்வருவனவற்றுள் வினா எழுத்து அல்லாதது எது?
a. எ b. ஆ c. ஒ d. யா

5. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படுவது
a. முதல் வேற்றுமை b. எட்டாம் வேற்றுமை
c. செயப்படுபொருள் வேற்றுமை d. ஆறாம் வேற்றுமை

6. பொருத்துக:
A. கலம் 1. இடைப்போலி
B. மயல் 2. இறுதிப்போலி
C. அஞ்சு 3. முற்றுப்போலி
D. இலஞ்சி 4. முதற்போலி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

7. இடைச்சொல் பற்றிய கீழ்வரும் கூற்றுகளுள் சரியானதைத் தேர்வு செய்க.
1. பெயர்ச்சொல், வினைச்சொல்லுடன் சேர்ந்தே வரும்
2. இணைச்சொல்லாகவும் அசையாகவும் வரும்
3. வேற்றுமை உருபாகவும், உவம உருபாகவும் வரும்
4. தனியாக வரும்பொழுது பொருள் தராது
a. அனைத்தும் சரி b. 1, 2, 4 மட்டும் சரி c. 1, 3, 4 மட்டும் சரி d. 1, 4 மட்டும் சரி

8. ஓரெழுத்து ஒருமொழியின் எண்ணிக்கை
a. 42 b. 48 c. 43 d. 47

9. பொருத்துக:
A. வளையலுக்குப் பொன் 1. தகுதி
B. கூலிக்கு வேலை 2. முறை
C. வீட்டுக்கு ஒரு பிள்ளை 3. அதுவாதல்
D. அனிதாவுக்கு மகன் அன்பரசு 4. பொருட்டு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 3 | 4 | 1 | 2 |

10. ‘ஐ’ என்னும் ஓரெழுத்து ஒருமொழியின் பொருள்

a. சோலை b. அரசன் c. தலைவன் d. அரண்

11. பொருத்துக:

A. எண்கு 1. பன்றி

B. கேழல் 2. கரடி

C. கேசரி 3. மான்

D. மரை 4. சிங்கம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

12. உவகை, சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் முதலியவற்றின் காரணமாக வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்படும் வழுக்கள் எவை?

a. காலவழு, வினா வழு, விடைவழு b. பால்வழு, இடவழு, மரபுவழு

c. திணைவழு, பால்வழு, காலவழு d. திணைவழு, இடவழு, வினாவழு

13. தாம் கருதிய பொருளையும் ஒப்புமைப் பொருளையும் வெவ்வேறு எனக் கூறாமல், இரண்டும் ஒன்றே! எனக் கூறுவது

a. உவமையணி b. நிரல்நிறை அணி c. உருவக அணி d. தற்குறிப்பேற்றணி

14. மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே - இங்கு பயின்று வரும் பொருள்கோள்

a. மொழிமாற்றுப்பொருள்கோள் b. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

c. அளைமறிப் பாப்புப் பொருள்கோள் d. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

15. செய்யுளில் ஆய்த எழுத்தானது எவ்வாறு கருதப்படுகிறது?

a. உயிர் நெடில் b. ஒற்று c. உயிர் குறில் d. உயிர்மெய்க்குறில்

16. பொருத்துக:

A. காய்ச்சீர் 1. ஆசிரிய உரிச்சீர்

B. கனிச்சீர் 2. பொதுச்சீர்

C. மாச்சீர், விளச்சீர் 3. வெண்பா உரிச்சீர்

D. நாலசைச்சீர் 4. வஞ்சியுரிச்சீர்

| | A | B | C | D | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 | b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 2 | 1 | 4 | 3 | d. | 1 | 3 | 4 | 2 |

17. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு - இக்குறளின்
ஈற்றுச்சீர் எந்த வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது?

a. நாள் b. மலர் c. காசு d. பிறப்பு

18. அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது

a. அளவடி b. சிந்தடி c. நெடிலடி d. கழிநெடிலடி

APOLLO STUDY CENTRE

19. பின்வருவனவற்றுள் தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க
a. அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து இலக்கணங்களைப் பற்றியும் அகத்தியத்தில் கூறியுள்ளார்
b. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருளுக்கு மட்டும் இலக்கணம் வகுத்துள்ளார்.
c. மக்கள் இலக்கியம் என அழைக்கப்படுவது சங்க இலக்கியம் ஆகும்.
d. நமக்குக் கிடைத்துள்ள இலக்கண நூல்களுள் மிகப்பழமையானது அகத்தியம் ஆகும்

20. சரியான வரிசையில் அமைந்த சொற்றொடரைக் கண்டறிக.
a. மேனி வளைத்துவாய் பணிந்து மண்ணுறப் புதைத்து நின்றான்.
b. வாய் புதைத்து மேனிப் பணிந்து மண்ணுற வளைந்து நின்றான்
c. மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்
d. மண்ணுறப் பணிந்து வாய் வளைத்து மேனி புதைத்து நின்றான்

21. நுனி நா, நுனி அண்ணத்தினைத் தொடுவதால் தோன்றும் எழுத்துகள்
a. க், ங் b. ட், ண் c. ச், ஞ் d. ர், ழ்

22. கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - இங்கு வனப்பு என்னும் சொல்லால் பெறப்படும் அணி
a. சொல்பின்வரு நிலையணி b. பொருள் பின்வரு நிலையணி
c. சொற்பொருள் பின்வருநிலையணி d. பிறிது மொழிதலணி

23. ஆகு பெயர் வகையைக் கண்டறிக: நன்னூல் கற்றேன்
a. கருவியாகு பெயர் b. சொல்லாகுபெயர் c. கருத்தாவாகுபெயர் d. காரியவாகுபெயர்

24. பொருத்துக:
A. தொழிற்பெயர் 1. நன்றி
B. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் 2. அகழ்வார்
C. பண்புப்பெயர் 3. சூடு
D. வினையாலணையும் பெயர் 4. வருதல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 1 | 3 | 4 | 2 |

25. எப்பொழுதும் பகாப்பதங்களாகவே இருக்கும் சொற்கள்
a. பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் b. இயற்சொல்லும், திசைச்சொல்லும்
c. இடைச்சொல்லும், உரிச்சொல்லும் d. திரிச்சொல்லும், வடச்சொல்லும்

26. தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்?
a. 40 b. 35 c. 30 d. 25

27. கற்க கசடறக் கற்பவை கற்றபின் - இங்கு பயின்று வந்துள்ள தொடை விகற்பங்களைக் கண்டறிக.
a. பொழிப்பு மோனை
b. கூழை மோனையும், கீழ்க்கதுவாய் எதுகையும்
c. மேற்கதுவாய் மோனையும், ஒரூஉ எதுகையும்
d. முற்றுமோனையும், மேற்கதுவாய் எதுகையும்

28. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் - இங்கு பயின்று வந்துள்ள அணி
a. வேற்றுமையணி b. நிரல்நிரையணி
c. இல்பொருள் உவமையணி d. பிறிதுமொழிதலணி



APPOLO STUDY CENTRE

29. பொருத்துக:

A. எதிரூன்றல் 1. நொச்சி
B. எயில்காத்தல் 2. காஞ்சி
C. அதிரப்பொருவது 3. தும்பை
D. செருவென்றது 4. வாகை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 2 | 4 | 3 | 1 |

30. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று எல்லா அடிகளும் அளவடிகளாக வருவது
a. நேரிசை ஆசிரியப்பா b. நிலைமண்டில ஆசிரியப்பா
c. இணைக்குறள் ஆசிரியப்பா d. a மற்றும் b இரண்டும்

31. தவறான மரபுச்சொல்லைக் கண்டறிக.
a. குரங்கு அலப்பும் b. கூகை குனுகும் c. வண்டு முரலும் d. பூனை சீறும்

32. சரியான பிரித்தறிதலைக் கண்டறிக.
தற்குறிப்பேற்ற அணி
a. தன்மை + குறிப்பு + ஏற்றம் + அணி b. தன் + குறிப்பு + ஏற்றம் + அணி
c. தன்குறிப்பு + ஏற்றம் + அணி d. தன்மை + குறிப்பேற்றம் + அணி

33. புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் எவ்வகை அணியாக கருதப்படுகிறது?
a. வேற்றுமையணி b. தற்குறிப்பேற்றணி c. வஞ்சப்புகழ்ச்சி அணி d. இரட்டுற மொழிதலணி

34. பொருத்துக:

A. இரவுப்பொழுதின் முற்பகுதி 1. வைகறை
B. இரவுப்பொழுதின் இறுதிப்பகுதி 2. எற்பாடு
C. இரவுப்பொழுதின் நடுப்பகுதி 3. யாமம்
D. பகற்பொழுதின் இறுதிப்பகுதி 4. மாலை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

35. பொருத்துக:

A. பேயனார் 1. மருதம்
B. ஓதலாந்தையார் 2. முல்லை
C. கபிலர் 3. நெய்தல்
D. அம்மூவனார் 4. குறிஞ்சி
E. ஓரம்போகியார் 5. பாலை

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 5 | 2 | 1 |
| b. | 2 | 5 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 3 | 2 | 5 |
| d. | 4 | 2 | 1 | 5 | 3 |

36. கண்ணுதல் - இலக்கணக் குறிப்பு தருக.
a. ஒருபொருட்பன்மொழி b. பண்புத்தொகை c. இலக்கணப்போலி d. வினைத்தொகை

APOLLO STUDY CENTRE

37. பொருத்துக:

A. எதிர்கால இடைநிலை — 1. க, இய, இயர்
B. எதிர்மறை இடைநிலை — 2. ஆ, அல், இல்
C. வியங்கோள் வினைமுற்று விகுதி — 3. மின்
D. ஏவல் பன்மை வினைமுற்று விகுதி — 4. ப், வ்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

38. பொருத்துக:

A. 1, 3, 5, 7, 9 — 1. முல்லை
B. 6, 16 — 2. மருதம்
C. 4, 14 — 3. நெய்தல்
D. 10, 20 — 4. பாலை
E. 2, 8 — 5. குறிஞ்சி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 5 | 3 | 2 |
| b. | 4 | 2 | 1 | 3 | 5 |
| c. | 2 | 3 | 1 | 4 | 5 |
| d. | 4 | 2 | 5 | 1 | 3 |

39. பின்பனி என்னும் பெரும்பொழுது காலத்திற்குரிய மாதங்கள் யாவை?
a. மார்கழி, தை  b. மாசி, பங்குனி  c. ஆனி, ஆடி  d. சித்திரை, வைகாசி

40. குறிஞ்சி திணைக்குரிய உரிப்பொருள்
a. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்  b. ஊடலும் ஊடல் நிமித்தமும்
c. பிரிதலும் பிரிதல் நிமித்தமும்  d. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

41. பின்வருவனவற்றுள் உடம்படுமெய் எழுத்துக்களைக் கண்டறிக.
a. ர், ழ்  b. க, ச, த, ப  c. ய், வ்  d. எவையுமில்லை

42. கவிஞர்கள் தாம் கருதிய பொருளுக்கு ஒத்ததாக வேறொன்றைக் கூறி அப்பொருளைப் புலப்படுத்துவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
a. உருவக அணி  b. தொழிலுவமையணி  c. இல்பொருள் உவமையணி  d. பிறிதுமொழிதலணி

43. துயிலாநின்ற - இதில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம்
a. இறந்தகால பெயரெச்சம்  b. நிகழ்கால பெயரெச்சம்
c. எதிர்கால பெயரெச்சம்  d. எதிர்மறைப் பெயரெச்சம்

44. பொருத்துக:

A. ஆன் — 1. பசு
B. ஆ — 2. காளை
C. கா — 3. எருமை
D. மா — 4. விலங்குப் பொதுப்பெயர்
E. ஆவேறு — 4. காடு

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 5 | 2 | 3 |
| b. | 4 | 5 | 3 | 2 | 1 |
| c. | 3 | 1 | 4 | 2 | 5 |
| d. | 3 | 1 | 5 | 4 | 2 |

45. பொருத்துக:

A. முகம், கை — 1. இடப்பெயர்
B. வேலூர், நாமக்கல் — 2. காலப்பெயர்
C. கண்ணன், நாற்காலி — 3. சினைப்பெயர்
D. தைத்திங்கள் நண்பகல் — 4. பொருட்பெயர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 1 | 3 | 4 | 2 |
| d. | 3 | 1 | 2 | 4 |

46. பின்வரும் வெண்பாவின் ஈற்றுச்சீரை (ஓரசைச்சீர்) அவற்றின் வாய்ப்பாடுடன் பொருத்துக.

A. நாடு — 1. நாள்
B. என் — 2. மலர்
C. உலகு — 3. காசு
D. படும் — 4. பிறப்பு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 3 | 1 | 4 | 2 |

47. பின்வருனவற்றுள் இயற்சீர் என்று அழைக்கப்படுவது எது?

a. வெண்பா உரிச்சீர் b. வஞ்சியுரிச்சீர் c. பொதுச்சீர் d. ஆசிரிய உரிச்சீர்

48. பொருத்துக:

A. தளை — 1. 8
B. பொருள்கோள் — 2. 6
C. பெயர்ச்சொல் — 3. 16
D. ஆகுபெயர் — 4. 7

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 2 | 1 | 4 | 3 |

49. அந்தமான், தாமரை முதலியன எவ்வகை சொற்கள்?

a. தொடர்மொழி b. பொதுமொழி c. தனிமொழி d. இரட்டைக்கிளவி

50. பொருத்துக:

A. உண்ட கந்தன் — 1. குறிப்புப் பெயரெச்சம்
B. மெல்லப் பேசினான் — 2. தெரிநிலைப் பெயரெச்சம்
C. படித்துத் தேறினான் — 3. தெரிநிலை வினையெச்சம்
D. நல்ல பையன் — 4. குறிப்பு வினையெச்சம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 3 | 4 | 2 | 1 |

APPOLLO STUDY CENTRE

51. ஒரு சொல் தனது முன்னும், பின்னும் வரும் சொற்களால் ஒரு பாலை நீக்கி, மற்றொரு பாலைச் சுட்டுவது

a. ஒன்றொழி பொதுச்சொல் b. ஆகுபெயர் c. இனங்குறித்தல் d. வெளிப்படை

52. அடுக்குத்தொடர் பற்றிய கூற்றுகளுள் சரியானதைக் கண்டறிக.

I. பிரித்தால் பொருள் தரும் II. இரண்டு முறை மட்டும் அடுக்கி வரும்

III. இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும்

a. I மட்டும் சரி b. அனைத்தும் சரி c. I, II சரி d. I, III சரி

53. ‘சொல்’ என்ற பொருள் தருவது

a. கிழவி b. கிலவி c. கிளவி d. a மற்றும் c

54. பொருத்துக:

| | |
|---|---|
| A. வாழ்த்துதல் | 1. செல்க |
| B. வைதல் | 2. வாழ்க |
| C. விதித்தல் | 3. ஈக |
| D. வேண்டுதல் | 4. ஒழிக |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

55. தமிழ் எழுத்துக்களின் மாத்திரை அளவினைப் பொறுத்து சரியான விடையைக் கண்டறிக.

a. குறில் - 1 மாத்திரை
நெடில் - 1 மாத்திரை
மெய் - ½ மாத்திரை
ஆய்தம் - ½ மாத்திரை

b. குறில் - 2 மாத்திரை
நெடில் - 3 மாத்திரை
மெய் - 1 மாத்திரை
ஆய்தம் - 1 மாத்திரை

c. குறில் - 1 மாத்திரை
நெடில் - 2 மாத்திரை
மெய் - ½ மாத்திரை
ஆய்தம் - ½ மாத்திரை

d. குறில் - 1 மாத்திரை
நெடில் - 1 ½ மாத்திரை
மெய் - 1 மாத்திரை
ஆய்தம் - ½ மாத்திரை

56. குற்றியலுகரத்தில் சொல்லின் இறுதியில் வரும் உகரம் __________ மாத்திரை அளவில் ஒலிக்கும்.

a. அரை b. ஒரு c. இரண்டு d. கால்

57. பொருத்துக:

| | |
|---|---|
| A. பட்டு, சுக்கு | 1. மென்றொடர்க் குற்றியலுகரம் |
| B. சார்பு, மூழ்கு | 2. வன்றொடர்க் குற்றியலுகரம் |
| C. சங்கு, நண்டு | 3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| D. எ∴கு, அ∴து | 4. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 3 | 1 | 2 | 4 |

58. வாழ்த்துதல், வேண்டுதல், கட்டளையிடுதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும் தொடர் எது?

a. உடன்பாட்டுத்தொடர் b. வினாத்தொடர் c. விழைவுத்தொடர் d. எதிர்மறைத்தொடர்

59. மாறன் ஓவியம் வரைந்தான் - செயப்பாட்டு வினையாக மாற்றுக.
a. ஓவியம் மாறனால் வரையப்பட்டது b. என்னே, அழகு மாறனின் ஓவியம்
c. மாறன் ஓவியம் வரைந்திலன் d. இவை எதுவுமில்லை

60. சரியாக பொருந்தாததைக் கண்டறி.
I. என்னே, இமயலையின் உயரம் - உணர்ச்சித் தொடர்
II. நீடுழி வாழ்க - விழைவுத்தொடர்
III. பாடம் படித்தாயா - வினாத்தொடர்
IV. கண்ணன் பாடம் படித்தான் - உடன்பாட்டுத் தொடர்
a. I b. II c. IV d. எதுவுமில்லை

61. பொருத்துக:
A. கலம்பக உறுப்புகள் 1. கo
B. உயிரெழுத்துகள் 2. கஅ
C. பகுபத உறுப்புகள் 3. கஉ
D. சார்பெழுத்துகள் 4. சா

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

62. பொருத்துக:
A. இயற்சொல் 1. சமஸ்கிருத சொற்கள்
B. திரிசொல் 2. எல்லோருக்கும் விளங்குவது
C. வடசொல் 3. கற்றோர்க்கு மட்டும் விளங்குவது
D. திசைச்சொல் 4. பிறபகுதிகளிலிருந்து தமிழில் வழங்குவது

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 4 | 1 | 3 |

63. பொருத்துக:
A. புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு 1. இடக்கரடக்கல்
B. நகர்ப்புறம், கால்வாய், கொம்பு நுனி 2. மங்கலம்
C. இறைவனடி சேர்ந்தார் 3. இலக்கணமுடையது
D. வாய்பூசி வந்தேன் 4. இலக்கணப்போலி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 3 | 4 | 1 | 2 |

64. சரியாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.
I. ஆடு – பட்டி II. மாடு – தொழுவம் III. குதிரை – கொட்டில் IV. யானை - கூடம்
a. I, II, III சரி b. I, III, IV சரி c. I, II, IV சரி d. அனைத்தும் சரி

65. பொருத்துக:
A. வழக்கு 1. 6
B. விகாரப்புணர்ச்சி 2. 3

APOLLO STUDY CENTRE

C. தொகைநிலைத்தொடர் 3. 2

D. தொகாநிலைத்தொடர் 4. 9

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

66. பின்வருவனவற்றுள் இயல்பாக புணர்வது எது?

a. பொன் + குடம் b. பாடம் + வேளை c. தமிழ் + மண் d. வாழை + குலை

67. பொருத்துக:

A. குடிதழீஇ 1. செய்யுளிசை அளபெடை

B. உழாஅர் 2. ஒற்றளபெடை

C. உடுப்பதூஉம் 3. இன்னிசை அளபெடை

D. அரங்ங்கம் 4. சொல்லிசை அளபெடை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 1 | 3 | 4 | 2 |

68. பொருத்துக:

A. ஆவி 1. மாத்திரை

B. அளபு 2. மார்பு

C. மிடறு 3. உயிரெழுத்து

D. உரம் 4. கழுத்து

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 3 | 1 | 2 | 4 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 3 | 4 | 2 | 1 |

69. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்

a. பகுதி, சந்தி b. இடைநிலை, சாரியை c. பகுதி, விகுதி d. சந்தி, சாரியை

70. பொருத்துக:

A. பொருட்பெயர் 1. நாள், ஆண்டு

B. இடப்பெயர் 2. வெண்மை, வட்டம்

C. காலப்பெயர் 3. சென்னை, தஞ்சை

D. பண்புப்பெயர் 4. புத்தகம், பசு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 3 | 1 | 4 | 2 |

71. சொல்லின் முதலில் மட்டுமே வருவது

a. ஐகாரக்குறுக்கம் b. ஔகாரக் குறுக்கம் c. மகரக் குறுக்கம் d. ஆய்தக்குறுக்கம்

APOLLO STUDY CENTRE

72. சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களிலும் வந்து தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது

a. ஐகாரக்குறுக்கம் b. ஔகாரக்குறுக்கம் c. மகரக்குறுக்கம் d. ஆய்தக்குறுக்கம்

73. பொருத்துக:

A. செய்தான் — 1. தொடர்மொழி
B. படம் பார்த்தான் — 2. தனிமொழி
C. வேங்கை — 3. பொதுமொழி
D. முக்கனி — 4. தொகைச்சொல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

74. மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் தோன்றுவது

a. வ் b. த், ந் c. ள் d. ற், ன்

75. பொருத்துக:

A. ஆதிரையான் — 1. பொருட்பெயர் பகுபதம்
B. கண்ணன் — 2. பண்புப்பெயர் பகுபதம்
C. பொன்னன் — 3. காலப்பெயர் பகுபதம்
D. கரியன் — 4. சினைப்பெயர் பகுபதம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 1 | 4 | 2 |

76. வளையல் என்னும் பெயர்

a. காரணப் பெயர் b. இடுகுறி சிறப்புப் பெயர்
c. காரணப் பொதுப் பெயர் d. காரண சிறப்புப் பெயர்

77. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான மரபுச் சொல்லைக் கண்டறிக.

a. மான்குட்டி, யானைக்குட்டி, சிங்கக்குட்டி, புலிக்குட்டி
b. மான்கன்று, யானைகன்று, சிங்கக்குட்டி, புலிப்பறழ்
c. மான்கன்று, யானைக்கன்று, சிங்கக் குருளை, புலிக்குட்டி
d. மான்கன்று, யானைகன்று, சிங்கக் குருளை, புலிப்பறழ்

78. மருதத் திணைக்குரிய உரிப்பொருள்

a. புணர்தலும் புணர்தல் நிமித்தமும் b. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
c. ஊடலும் ஊடல் நிமித்தமும் d. பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

79. குறிஞ்சி நிலத்திற்கான பறை

a. ஏறுகோட்பறை b. தொண்டகப்பறை c. போர்ப்பறை d. நெல்லரிகணை

80. கீழ்க்கண்டவற்றுள் சேய்மைச்சுட்டு எது?

a. இப்பக்கம் b. அப்பக்கம் c. உப்பக்கம் d. எப்பக்கம்

81. 'டெலஸ்கோப்' என்பதன் தமிழ்ச்சொல்

a. நுண்ணோக்கி b. தொலைநோக்கி c. வெப்பமானி d. உருப்பெருக்கி

APPOLO STUDY CENTRE

82. ஒரு விரலைக்காட்டிச் சிறிதோ? பெரிதோ? என வினவுவது
a. காலவழு b. வினாவழு c. விடைவழு d. மரபுவழு

83. ஆகுபெயர் வகை அறிக - நாரதர் வருகிறார்
a. காரியவாகு பெயர் b. கருத்தாவாகு பெயர் c. கருவியாகு பெயர் d. உவமையாகு பெயர்

84. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்கி, சரியான தொடரைக் குறிப்பிடுக.
a. பேகன் படைமடம் படுதல் அல்லது கொடைமடம் படான்
b. படைமடம் பேகன் படான் கொடைமடம் படுதல் அல்லது
c. கொடைமடம் பேகன் படுதல் அல்லது படைமடம் படான்
d. பேகன் கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான்

85. நின்கேள் - இலக்கணக்குறிப்பு தருக.
a. நான்காம் வேற்றுமைத்தொகை
b. ஆறாம் வேற்றுமைத்தொகை
c. ஐந்தாம் வேற்றுமைத்தொகை
d. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

86. பின்வருனவற்றுள் உவமைச் சொல்லைக் கண்டறிக.
a. தமிழ்த்தேன் b. மொழியமுது c. பல்முத்து d. மதிமுகம்

87. கருவிளங்காய் என்பது
a. நிரை நிரை நிரை b. நிரை நேர் நிரை c. நிரை நிரை நேர் d. நேர் நிரை நேர்

88. நேரடி என்று அழைக்கப்படுவது
a. குறளடி b. அளவடி c. சிந்தடி d. கழிநெடிலடி

89. பின்வருவனவற்றுள் இடதுபுறம் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை பகுத்தால் கிடைக்கும் இடைநிலையைக் கருத்திற்கொண்டு பொருத்துக.

| | |
|---|---|
| A. உண்ணாநின்றான் | 1. இறந்தகால இடைநிலை |
| B. உண்டான் | 2. எதிர்கால இடைநிலை |
| C. உண்பான் | 3. நிகழ்கால இடைநிலை |
| D. உண்டிலன் | 4. எதிர்மறை இடைநிலை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 1 | 2 | 3 | 4 |

90. பொருத்துக:

| | |
|---|---|
| A. பகுபதத்தில் முதலில் வருவது | 1. சந்தி |
| B. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது | 2. பகுதி |
| C. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது | 3. விகுதி |
| D. பகுபதத்தில் இறுதியில் நிற்பது | 4. சாரியை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

91. செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது
a. விற்பூட்டுப்பொருள்கோள் b. தாப்பிசைப்பொருள்கோள்
c. மொழிமாற்றுப்பொருள்கோள் d. நிரல்நிறைப் பொருள்கோள்

92. பொருத்துக:

A. கண்ணகி வந்தான் — 1. திணைவழு
B. என் மாமா வந்தது — 2. இடவழு
C. கரிகாலன் நாளை வந்தான் — 3. காலவழு
D. நாங்கள் வந்தார்கள் — 4. பால்வழு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 1 | 4 | 3 | 2 |

93. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது

a. வழாநிலை b. வழுவமைதி c. வினாவழு d. விடைவழு

94. நாற்கரணங்கள் என்று அழைக்கப்படுவது

a. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா b. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
c. வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் d. அறம், பொருள், இன்பம், வீடு

95. அன்பும் அறனும் உடைத்தாயின் இவ்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?

a. ஏகதேச உருவக அணி b. நிரல்நிறை அணி
c. தொழிலுவமையணி d. இரட்டுற மொழிதலணி

96. ‘செய்வாயா’ என்னும் கேள்விக்கான பதில்கள் இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளன அவை எவ்வகையான விடைகள் என கண்டறிந்து பொருத்துக.

A. செய்யாமலிருப்பேனா — 1. உற்றதுரைத்தல்விடை
B. கை வலிக்கும் — 2. உறுவதுகூறல்விடை
C. உடம்பு நொந்தது — 3. மறைவிடை
D. செய்யேன் — 4. வினா எதிர்வினாதல் விடை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 4 | 2 | 1 | 3 |

97. சரியான இணை / இணைகளைக் கண்டறிக.

A. கடலில் கரைத்த பெருங்காயம் போல- பயனின்மை
B. வேலியே பயிரை மேய்ந்தாற்போல - நம்பிக்கை துரோகம்
C. ஆகாயத்தாமரை - இல்லாத ஒன்று
D. உள்ளங்கை நெல்லிக்கனிபோல - தெளிவு

a. A, B, C மட்டும் சரி b. A, C, D மட்டும் சரி c. A, B, D மட்டும் சரி d. அனைத்தும் சரி

98. ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைகளைப் பெற்றுவரும் புறத்திணைகள்

a. கைக்கிளை, பெருந்திணை b. தும்பை, வாகை
c. பாடாண், பொதுவியல் d. காஞ்சி, நொச்சி

99. மேல் உதடும் கீழ் உதடும் பொருந்துவதனால் தோன்றும் எழுத்துகள்

a. க், த் b. ப், ம் c. த், ந் d. ல், ள்

100. பின்வருவனவற்றுள் எது இதழ் குவி உயிர் அல்ல?

a. ஊ b. ஒ c. ஐ d. ஔ

APOLLO STUDY CENTRE

# TNUSRB – SUB INSPECTOR RECRUITMENT TRAINING – 2022
## TEST XIV – REVISION I - TAMIL ILAKANAM

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **B** | **D** | **C** | **C** | **A** | **B** | **A** | **A** | **D** | **C** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **C** | **C** | **C** | **D** | **B** | **B** | **D** | **C** | **D** | **C** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **C** | **D** | **A** | **C** | **B** | **D** | **D** | **B** | **B** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **B** | **B** | **C** | **C** | **B** | **C** | **A** | **B** | **B** | **D** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **C** | **D** | **B** | **D** | **A** | **D** | **D** | **A** | **B** | **B** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **A** | **A** | **C** | **D** | **C** | **A** | **B** | **C** | **A** | **D** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **B** | **C** | **A** | **D** | **B** | **C** | **B** | **A** | **C** | **A** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **B** | **A** | **D** | **A** | **C** | **D** | **D** | **C** | **B** | **B** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **B** | **B** | **D** | **D** | **A** | **D** | **C** | **B** | **A** | **d** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **D** | **C** | **B** | **B** | **B** | **D** | **D** | **A** | **B** | **C** |

APOLLO STUDY CENTRE